திரு. பெ. சு. திருவேங்கடம் : இந்த இராமேஸ்வரம் அபிவிருத்தித் திட்டத்திற்காக போடப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையில் மத்திய அரசிடம் கடனாகக் கேட்ட தொகை எவ்வளவு ? அல்லது மானியமாக கேட்டிருக்கிற தொகை எவ்வளவு என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : நாம் பொதுவாக இப்படிப்பட்ட பெரும் திட்டம் ஒன்றை அவர்களுக்கு அனுப்பினோம். இதில் எந்தெந்தத் திட்டங்களை அவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும், இதிலே எது எது வருமானம் வருகிற திட்டம் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் கணக்கெடுத்து நமக்கு அறிவிக்க வேண்டும். இதில் உச்சிப்பிள்ளைக்கல் விமானக் கூடத்தை மேம்படுத்துதல் என்ற திட்டம் ரூ. 982·60 இலட்சம். இவைகளையெல்லாம் மத்திய அரசினுடைய உதவி அல்லது கடன் அளிப்பதன் மூலம்தான் நிறைவேற்ற முடியும். அதுபோலவே துறைமுகத் திட்டம். ஆகவே இப்படிப்பட்ட குறிப்பிட்ட திட்டங்களுக்காவது மத்திய அரசு உதவி அளிக்க வேண்டும் அல்லது கடன் அளிக்க வேண்டும் என்பதுதான் மாநில அரசின் விருப்பம்.

வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை.

*வினா எண். 247—திரு. எஸ், இராசாராமன்: மாண்மிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980—1981, 1981—82-ஆம் ஆண்டுகளில் வேளாண்மை பயிற்சிப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) மாணவர்கள் எந்தத் தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) அரசு வேளாண்மைப் பள்ளிகளில் 1980—81-ல் 384 பேர்களும், 1981—82-ல் 255 பேர்களும் பயின்றுள்ளனர்.

(ஆ) 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் உள்ள 8-வது வகுப்பு தேறி, பயிர்த் தொழிலில் இரண்டாண்டு அனுபவம் உள்ள மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. செ. இராமலிங்கம் : வேளாண்மைப் பயிற்சிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும்போது விவசாயிகள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் என அரசு ஆணை பிறப்பிக்குமா ? அல்லது குறைந்தபட்சம் முன்னுரிமையாவது வழங்கப்படுமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 8]

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : பெரும்பாலும் விவசாயக் குடும்பங்களிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஏனென்றால் இரண்டாண்டுகள் விவசாயத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் என்கிறபோது பொதுவாக அந்தக் குடும்பங்களிலிருந்துதான் அப்படிப்பட்டவர்கள் வரமுடியும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : 1980—81 81—82ம் ஆண்டுகளில் பயிற்சி பெற்ற மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் வேலை கிடைத்துவிட்டதா ? எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இதில் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளித்து இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படுவதில்லை. வேளாண்மைத் துறை முன்னேற்றத்திற்காகத்தான் இந்தப் பயிற்சி வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்புகள் கிடைக்கிற நேரத்தில் அவ்வப்போது அவர்கள் வேலை பெறுகிறார்கள்.

[முற்பகல் 9.30]

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே எந்தெந்த இடங்களில் வேளாண் பயிற்சிப் பள்ளிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, அது ஒரு நீண்ட பட்டியல். ஏறத்தாழ 13 இடங்களில் இந்தப் பயிற்சி பள்ளி செயல்படுகிறது. தனிக் கேள்வியாகக் கேட்டால், அவைமுன் வைக்கலாம்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண் பயிற்சிப் பள்ளியிலே படிக்கின்றவர்களுக்கு இப்போது தமிழக அரசின் மூலமாக பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இந்த பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தில், அந்தப் பகுதிகளில் அவர்களுக்கு தேர்வு வைத்து, அதிலே வேலைக்கு ஆட்கள் எடுப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, இதுபோன்ற பயிற்சியில் அவர்கள் வேலை பெறுகின்ற அளவில், வகை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு, இந்த பயிற்சி வழித் திட்டத்தில், அவர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய ஜாயின்ட் டைரக்டர் மூலமாக தேர்வு நடத்தி, வேலையில் சேர்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, இது வேலை வாய்ப்புக்காக நடத்தப்படுகின்ற பயிற்சி அல்ல. வேளாண் துறையின் முன்னேற்றத்திற்காக, கிராமத்திலே அவர்கள் முற்போக்கு விவசாயிகளாக இருந்து, மற்றவர்களுக்கு வழிகாட்டிகளாக அமையும் வகையில் இருக்க இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது. அவ்வப்போது ஏற்படுகின்ற பதவிகளில் இவர்கள் வயல்விளக்க, செயல்விளக்க உதவியாளர்கள் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றார்கள்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த வேளாண் பயிற்சிப் பள்ளி, வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தலைமையில் செயல்படுகின்ற திட்டம் என்று கருதுகிறேன். இந்த வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற பெரிய ஆராய்ச்சியாளர்கள், இந்தப் பயிற்சிப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கின்றார்கள். அங்கே வேலையில் இருக்கும் இவர்களுக்கு நியாயமான ஊதியம், பதவிகள் கிடைக்காமல் அவர்கள் கிளர்ச்சியை நடத்துகிறார்கள். எனவே, அவர்களைக் கூப்பிட்டு, நமது அமைச்சர் அவர்கள் அவர்களோடு பேசி, இந்தப் பிரச்னையை ஒழுங்காக முடிவு செய்வார்களா என்றும், இந்தப் பயிற்சியை அவர்கள் நல்ல முறையில் நடத்துவதற்கு வழிசெய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை வைத்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்னையை எழுப்பியிருக்கிறார்கள். இந்தப் பயிற்சிப் பள்ளிக்கும், வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கும் தொடர்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் அந்த ஆராய்ச்சியாளர்களை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்.

திரு. பி. துரைராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மைப் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு அரசாங்கம் எவ்வளவு உதவித் தொகை கொடுக்கின்றது? அந்த உதவித் தொகை போதவில்லையென்றால், அதை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாதம் ரூ. 70 உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. உதகமண்டலத்தில் ரூ. 75 உபகாரச் சம்பளம் கொடுக்கப் படுகின்றது. அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றது. போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பிரச்னையைக் கிளப்ப வேண்டாம்.

புதுக்கோட்டை மாவட்டம் வம்பனில் வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் திட்டம்.

*வினா எண் 315—திரு. பெ. திருமாறன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் வம்பனில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மற்றுமொரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கும் கருத்துரு அரசின் பரிசிலனையில் உள்ளது. கல்லூரியை அமைப்பது என்று முடிவு செய்யும்போதுதான், இடம் எது என்பதை முடிவு செய்யலாம்.